2014 ஜூலை 21]

கோரிக்கையை, எல்லோரையும் வாழ வைக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

206—

தரம் உயர்த்துதல்

***5077—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, வள்ளுவர்புரம், பெரியபணமுட்லு, சூலாமலை, மேட்டுப்புலியூர் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதிக்குட்பட்ட பெரியபணமுட்லு, சூலாமலை மற்றும் மேட்டுப்புலியூர் ஆகிய இடங்களில் செயல்படும் அரசு நடுநிலைப் பள்ளிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் 2011 ஆம் கல்வியாண்டிலேயே அரசு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வள்ளுவர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாததால் அதனை உயர்நிலைப் பள்ளியாகத் தரம்

உயர்த்த தற்போது வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் போற்றி மகிழும் புரட்சித் தாயின் பொற்கால ஆட்சியில், எங்கள் ஆக்கமும் எங்கள் அம்மா! எங்கள் ஊக்கமும் எங்கள் அம்மா! ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை அகிலம் போற்றும் கல்வி தந்து! நாளைய உலகம் போற்றும்வகையில் கல்விதனைத் தருவதும் எங்கள் அம்மா! கல்வியின் காவல் தெய்வமாக விளங்கும் எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பர்கூர் ஊராட்சி ஒன்றியம், பெலவர்த்தி ஊராட்சியில் வள்ளுவர்புரத்திலும் அதனைத் தொடர்ந்து பெரியபணமுட்லு, ஆலாமலை, மேட்டுப்புலியூர் ஆகிய கிராமங்களில் நீண்ட காலமாக போதிய மாணவர்களைக் கொண்டு நல்ல முறையில் இயங்கிவருகிற அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள நாகோஜணஹள்ளி பேரூராட்சியைச் சார்ந்த வேலம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 748 மாணவர்களும், 698 மாணவிகளும், மொத்தம் 1,446 மாணவ, மாணவிகள் நன்கு பயின்று வருகிறார்கள். மாவட்டத்திலேயே சிறப்பான பள்ளியாகச் செயல்பட்டு வருகிற அந்தப் பள்ளியின் நிலை கருதியும், 698 மாணவிகளைக் கொண்டு நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருக்கும் மேல்நிலைப் பள்ளியை மாணவிகளின் நலன்கருதியும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மேலானப் பார்வைக்கு எடுத்துச்சென்று இரண்டாகப் பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்டிருந்த 4 கிராமங்களில், மூன்று கிராமங்களிலுள்ள பள்ளிகள் மாண்புமிகு அம்மா அவர்களால் 2011–2012 ஆம் கல்வியாண்டிலே உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலே வள்ளுவர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மட்டும் இன்னும் தரம் உயர்த்தப்படவில்லை. அங்கே, பொதுமக்களின் பங்களிப்பான ரூபாய் ஒரு இலட்சம் இதுவரை செலுத்தப்படவில்லை. இப்பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு மூன்று ஏக்கர் நிலம் தேவை. ஆனால், அப்பள்ளியில் 20 சென்ட் இடம் மட்டுமே உள்ளது. மேலும், இப்பள்ளிக்கு மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் மேகனசின்னம்பள்ளியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், மகாராஜா கடை அரசு உயர்நிலைப் பள்ளியும், அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் மற்றும் மூன்றரைக் கிலோ மீட்டர் தொலைவில் சின்னதளவர்த்தி அரசு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. எனவே, தற்போது இந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவேரிப்பட்டிணம், வேலம்பட்டியில் ஒரு புதிய மகளிர் உயர்நிலைப் பள்ளியை உருவாக்கித் தர வேண்டுமென்று கூடுதலாக ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் ஏற்கெனவே அரசு மேல்நிலைப் பள்ளிகள் பிரிக்கப்பட்டு தனியாக பெண்களுக்கென உயர்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலித்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் பூர்த்திச்செய்யப்பட்டிருந்தால் நிதிநிலையைப் பொறுத்து மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று அதைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாகப் பிரித்துத் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலம்பட்டி மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மாணவிகளுக்கான உயர்நிலைப் பள்ளியைத் துவங்க போதிய கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டும், போதிய நிதியினை பெற்றோர்—ஆசிரியர் கழகத்தின் மூலமாக கருவூலத்தில் செலுத்தியும், இரண்டு ஆண்டுகளாக எதிர்பார்த்து இருக்கின்ற மகளிர் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத் தர, பொற்கால ஆட்சியினுடைய மாண்புமிகு முதல்வர், நாங்கள் போற்றி வணங்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலம்பட்டியிலே, மாணவிகளின் நலன் கருதி, நல்ல முறையில் நடைபெற்று வருகின்ற மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மாணவிகளுக்கான உயர்நிலைப் பள்ளியைத் துவங்க ஆவன செய்யப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

தார்ச் சாலை அமைத்தல்

***37314—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிபட்டி தொகுதி, கடமலை—மயிலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பண்டாரஊத்து மலைக் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?